# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 194/மா/2023**

**நாள்: 04.09.2023**

திரு. உமர் சிங்காரம் பிள்ளை,
திருச்சிராப்பள்ளி – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
வார்டு குழு அலுவலகம் – 4
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி – எதிர்மனுதாரர்

திருச்சி, ஏர்போர்ட், வயர்லெஸ் ரோடு, சுபா அகிலா நகர், மனை எண் 4ல் வசிக்கும் திரு. உமர் சிங்காரம் பிள்ளை என்பவரின் 17.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.06.2023–ல் பெறப்பட்டு 194/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

2. திருச்சி, ஏர்போர்ட், வயர்லெஸ் ரோடு, சுபா அகிலா நகர், மனை எண். 4ல் வசிக்கும் திரு. உமர் சிங்காரம் பிள்ளை என்பவரின் 17.06.2023 நாளிட்ட தனது மனுவில் :

3. திருச்சி, ஏர்போர்ட், வயர்லெஸ் ரோடு, சுபா அகிலா நகர் என்கிற இடத்தில் பல மாதங்களுக்கு மேலாக மிகப்பெரிய அளவில் பாறைக்கழிவு, குப்பைகள் உள்ளது. இந்த பாறைக்கழிவுகளினால் கொடிய விஷம் உள்ள கட்டுவிரியன் பாம்புகள் மற்றும் பிற விஷப் பூச்சிகள்

அதிக அளவில் வசிக்கும் கூடாரமாக உள்ளது. இங்கு வசிக்கும் பாம்புகள் பல நேரங்களில் வீடுகளில் புகுந்து அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இதனால் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் மிகப்பெரிய அச்ச உணர்வு ஏற்பட்டு ஒவ்வொரு நாளும் பயமாக உள்ளது. இரவு நேரங்களில் தெருக்களில் நடக்கவும் மிகுந்த அச்சமாக உள்ளது. ஆதலால் இந்த கழிவுகளை அகற்றி தரும்படி வேண்டியுள்ளார்.

**4. இம்முறைமன்ற கடித நாள் 11.7.2023 வாயிலாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரிடமிருந்து இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையாளர் தன்னுடைய 18.8.2023 நாளிட்ட அறிக்கையில் :**

திருச்சி, ஏர்போர்ட், வயர்லெஸ் ரோடு, சுபா அகிலா நகர் பகுதியில் புதைவடிகால் திட்டப்பணிகள் மேற்கொண்டபோது பாறைகள் வெட்டி எடுக்கப்பட்டது. அதில் சிறிதளவு பாறைகள் மனுதாரரின் குடியிருப்பு அருகே இருந்தது. இப்பணியில் ஒப்பந்த நிறுவனமான L&T நிறுவனத்தினருக்கு மேற்கண்ட பாறைக்கழிவுகளை அப்புறப்படுத்த அறிவுறுத்தப்பட்டது. அதன் பேரில் L&T நிறுவனத்தினரால் 28.06.2023 அன்று பாறைக்கழிவுகள் அகற்றப்பட்டுவிட்டது. எனவே, மனுதாரரின் கோரிக்கையான பாறைக்கழிவுகள் அகற்றப்பட்டதற்கான புகைப்பட நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு நகல் ஆகியவை, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்திற்கு அறிக்கையாக சமர்ப்பிக்கப்படுகிறது.

**5. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 16.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.08.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

கொடிய விஷமுள்ள கட்டுவிரியன் பாம்புகள் மற்றும் பிற விஷ பூச்சிகள் அதிக அளவில் வசிக்கும் கூடாரமாக உள்ள பாறைக்கழிவு, குப்பைகளை அகற்றக்கோரி கடந்த 24.2.2023 அன்று பொது புகாராக மனு செய்திருந்தேன். மேலும் இந்த விஷப்பூச்சிகள் பல நேரங்களில் வீடுகளில் புகுந்து குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் மற்றும் அப்பகுதியில் நடந்து செல்லும் பொதுமக்களுக்கும் பெரிய அச்சுறுத்தலாக உள்ளாகும் காரணத்தினால் பொது புகாராக மனு செய்து இருந்தேன்.

கீழே அட்டவணை இடப்பட்டுள்ள மிகப் பெரிய கடித போக்குவரத்து போராட்டத்திற்கு பிறகு 3 மாதங்கள் காலம் கடந்து மற்றும் நடுவர் முறை மன்றத்தில் முறையிட்ட பிறகு 28.06.23 அன்று முறையீட்டு மனுவின் மேல் தீர்வு காணப்பட்டுள்ளது.

கடித போக்குவரத்து விவரங்கள்

| எண். | கடிதம் | பெறுநர் விவரம் | தேதி | நடவடிக்கை ஆம்/ இல்லை |
|---|---|---|---|---|
| 1 | புகார்மனு | சுகாதார ஆய்வாளர் 58, பாரதிதாசன் சாலை கண்டோன்மென்ட் திருச்சி-1 | 24.02.2023 | இல்லை |
| 2 | நினைவூட்டல் கடிதம் | சுகாதார ஆய்வாளர் 58, பாரதிதாசன் சாலை கண்டோன்மென்ட் திருச்சி-1 | 03.04.2023 | இல்லை |
| 3 | இமெயில் மனு | Commr,trichy"tn, gov,in | 24.04.2023 | இல்லை |
| 4 | சட்ட அறிவிப்பு | திரு.கிருஷ்ணமூர்த்தி திருச்சி மாநகராட்சி பொன்மலை கோட்டம் பிரிவு-2 இளநிலைப்பொறியாளர் அலுவலகம் சுப்பிரமணியபுரம் திருச்சி-20 | 16.05.2023 | இல்லை |
| 5 | சட்ட அறிவிப்பு | ஆணையர் துணை ஆணையர் சுகாதார ஆய்வாளர் 58, பாரதிதாசன் சாலை கண்டோன்மென்ட் திருச்சி-1 | 16.05.2023 | இல்லை |
| 6 | முறைமன்ற மனு | முறைமன்ற நடுவர் 100 அண்ணாசாலை கிண்டி, சென்னை-32 | 17.06.2023 | ஆம் |

பொதுமக்கள் கொடுக்கும் மனுவின் மீது அரசு அலுவலர் எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கீழ்க்காணும் தமிழக அரசாணை, கடிதப் போக்குவரத்து மற்றும் உயர்நீதிமன்ற வழிகாட்டல் உள்ளது.

1) பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை – அரசாணை (நிலை) எண்.73
2) பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை – கடித எண்.6112/ஏ2/ 2018 -1 நாள் 16.03.2018
3) உயர்நீதிமன்ற தீர்ப்பு - நீதிப்பேராணை மனு எண்.20257/2014

03.04.2023 அன்று நான் அனுப்பிய நினைவூட்டல் கடிதத்தில் தமிழக அரசாணை, கடிதப் போக்குவரத்து மற்றும் உயர்நீதிமன்ற வழிகாட்டல் போன்றவைகளை மேற்கோள்களாகக் காட்டியும் அதனை அரசு அலுவலர்கள் பொருட்படுத்தாமல் மெத்தன போக்குடன் செயல்பட்டுள்ளனர். இது போன்று அரசு அலுவலர்களின் மெத்தனப்போக்கினால் சில சமயங்களில் பொதுமக்களுக்கு உயிரிழப்பு ஏற்படவும் வாய்ப்பு உள்ளது என்பதை இங்கு பதிவு செய்கிறேன். மேலும் அரசு அலுவலர்களின் காலதாமதத்தால் மென்பொறியாளர் ஆகிய நான் அரசுக்கு முறையாக ஒவ்வொரு மாதமும் ஏறக்குறைய ரூ.69000/- வரி செலுத்தும் எனக்கு மிகப்பெரிய மன உளைச்சல் கால விரயம் மற்றும் பண விரயமும் ஏற்பட்டுள்ளது.

எனக்கு ஏற்பட்டுள்ள பண விரயங்கள்

| எண் | செலவினங்கள் | செலவு | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | Printout cost<br>Photocopy cost<br>Register Post cost<br>Petrol Cost | தோராயமாக ஒரு முறைக்கு ரூ.100 வீதம் மொத்தம் 5 முறைக்கு | 500 |
| 2 | Travelling cost from Trichy to Madurai and Food | தோராயமாக | 500 |
| 3 | My one day salary include tax, due to this case taken one day leave | | 9004 |
| Total Amount | | | 10004 |

மேலும், இது போன்று அரசு அலுவலர்கள் மெத்தனப்போக்கோடு செயல்படாமல் இருப்பதற்கும் எனக்கு ஏற்பட்ட உளைச்சல் மற்றும் பணவிரயம் ஏற்பட்டதற்கும் மற்றும் ஏற்படாமல் இருப்பதற்கும் தகுந்த தீர்வினை வழங்குமாறு நடுவர் முறை மன்றத்திடம் வேண்டி கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

6. **திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையர் 21.08.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சுபா அகிலா நகர், வயர்லெஸ்ரோடு, ஏர்போர்ட் பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதியில் புதைவடிகால் திட்டப் பணிகள் (UGD work) செயல்படுத்தும்போது அங்கு வெட்டியெடுக்கப்பட்ட பாறைகளை அகற்றிட ஒப்பந்ததாரரான எல் அண்ட் டி நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டு தற்போது அங்குள்ள பாறைக்கழிவுகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை தெரிவித்து இது தொடர்பான புகைப்பட நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையர் அவர்களின் 18.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்றேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

7. **முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

திருச்சி, சுபா அகிலா நகரைச் சேர்ந்த திரு. உமர் சிங்காரம் பிள்ளை என்பவர், தான் வசிக்கும் பகுதியில் பாறைக்கழிவு மற்றும் குப்பைகள் பெரும் அளவில் போடப்பட்டு அதனால், அவ்விடத்தில் பாம்புகள் மற்றும் விஷப்பூச்சிகள் நடமாடுவதால், குழந்தைகள், பெரியோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மிகவும் அச்சப்படுவதாகவும் இது குறித்து திருச்சிராப்பள்ளி மண்டலம்-4ன் அலுவலகத்தில் புகார் மனு கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும், எனவே தன் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு அந்த பாறைக்கழிவுகளை அகற்றித் தருமாறும், நடவடிக்கை எடுக்காத திருச்சிராப்பள்ளி மண்டலம் 4ன் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குறும் கோரியுள்ளார்

புதை வடிகால் பணிகள் செய்த ஒப்பந்த நிறுவனமான L&T நிறுவனத்தை மனுதாரர் குறிப்பிட்ட பாறைக் கழிவுகளை அகற்றக் கோரி அறிவுறுத்தப்பட்டது. பின்னர் அந்நிறுவனத்தால் 28.06.2023 அன்று பாறைக்கழிவுகள் அகற்றப்பட்டது என்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்-4ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மனுதாரர் பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் 2023 ஆகிய மாதங்களில் மேற்குறிப்பிட்ட பாறைக்கழிவுகள் பற்றி புகார் மனு அளித்தும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4ன் அலுவலர்கள் காலதாமதமாக அதாவது ஐந்து மாதங்கள் கடந்து 28.6.2023 அன்றுதான் பாறைக்கழிவுகளை அகற்றியுள்ளனர். ஐந்து மாதங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்-4ன் அலுவலர்களின் மெத்தனப்போக்கை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் தன்னுடைய பொது நிகழ்ச்சிகளில் பொதுமக்களின் புகார் மனுக்களை உடனுக்குடன் பரிசீலனை செய்து பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தி வரும் நிலையில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம்–4ன் அலுவலர்கள் அதற்கு

எதிர்மறையாக பொதுமக்களின் புகார் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு இம்முறை மன்றம் தன்னுடைய அதிருப்தியைப் பதிவு செய்கிறது.

8. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் மற்றும் விதிகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் குறிப்பாக

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely :-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx xx xx

(b) xx xx xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules-ன்படி பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது:-

9. மனுதாரர் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் வரை புகார் மனு அளித்தும், ஐந்து மாதங்கள் கடந்து காலதாமதமாக 28.06.2023 அன்று நடவடிக்கை எடுத்து அங்குள்ள பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையில் பணியாற்றிய திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம்-4ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறை மன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பி வைக்குமாறும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04-ம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1 திரு. உமர் சிங்காரம் பிள்ளை, எண். 4 சுபா அகிலா நகர்
வயர்லெஸ் ரோடு , திருச்சி ஏர்போர்ட், திருச்சிராப்பள்ளி – 620 007.

2. ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 58 பாரதிதாசன் சாலை கன்டோன்ட்மென்ட்
திருச்சிராப்பள்ளி - 620 001

3. உதவி ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
வார்டுகுழு அலுவலகம் – 4, திருச்சிராப்பள்ளி

4 நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்,
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்